REGISTERED No. M. 6165. அணா. 2

917
917/134

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

REGISTRAR OF BOOKS
30 MAR 1954
MADRAS

## ஏப்ரல் 1954.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| இமாம் அபூஹனீபா (ரஹ்) .... .... | 1 |
| இறைவனே அருள்வாய் (கவிஞர் வேளாங்கண்ணி-சாந்திதாஸன்) .... | 5 |
| ஸைபுல்லாஹ் (M. S. காஜாமுஈனுத்தீன், M. M. H. A. காலேஜ், நீடூர்) | 7 |
| மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை) | 9 |
| சாந்தம் (மௌலவி K. H. அப்துல் கரீம் நூரிய்யி) | 17 |
| ஒழுக்கம் உயர்வானது (M. K. A. S. அஹ்மத் மீரா, சிருடையபுரம்) | 20 |
| ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா சரித்திரச் சுருக்கம் (வய்யம்பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 22 |
| ... அட்டூழியம் நீங்க வேண்டும் (... முஹம்மது அப்துல் காதிர் ஆலிம்) | 30 |


... இஸ்லாம் ஆபீஸ் :
... 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதறாஸ் 5.

3L
Q7ͻ2H/A124FI
1954
182029

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1-8-0
தனிப் பிரதி அணா. 2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா.

இது ஷாம் தேசத்தி லிருந்த லாபி றென்னும் ஆலிமுடைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீ பென்பவர் வெளியூர் சென்றிருக்கும் போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரை கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்றுக் கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியதவசியம்.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம்:-
ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

## ஏப்ரல்—1954.


## இமாம் அபூஹனீபா (ரஹ்.)


(M. S. காஜா முஈனுத்தீன் M. M. H. A. காலேஜ் நீடூர்.)


ஹிஜ்ரி 80-வது வருடத்தில் நபி நாயகம் (ஸல்) அவர்களின் உத்தம தோழர்களுடைய கால முடிவில் அப்துல் மலிக்பின் மர்வானின் கிலாபத் ஆட்சியின்போது கூபாவில் பிறந்த இமாம் அபூ ஹனீபா அவர்கள் ஹம்மாதுப்னி அபூ சுலைமான் அதாஃபின் அபூரபாஃ முஹம்மது பின் முன் கதிர் போன்ற சட்ட நிபுணர்களிடம் மதச் சட்டங்களும் சுய நிர்ணயப் பிரயோகமும் (இஜ்திஹாதும்) கற்றார்கள்.

அப்துல்லாஹ் பின் முபாரக், வக்கீஹ் பின் ஜர்ராஹ், காலி அபி யூஸுப் போன்ற மகான்கள் அவர்களிடம் மதச் சட்டங்களும், அதன் விதி விலக்கல்களும் பயின்றனர். அக்கால மக்களுக்கு மத்தியில் மதத் தீர்ப் பளிப்பதில் அவருக்குச் சமமானோர் எவருமில்லை. ஆகையால் திக்கெங்கும் அவருடைய பெயர்தான் புகழ்பட விளங்கலாயின. அவர்களுடைய தீர்ப்புகள் யாவற்றையும் சகலரும் அங்கீகரிப்பவர்களா யிருந்தனர். அவை யாவும் சத்தியத் திருமறையையும் நபிகள் நாயகம் வாக்கியங்களையுமே முற்ற முற்ற அடிப் படையாகக் கொண்டுள்ளன.

மதச் சட்டங்களையும், சட்டக் கிரந்தங்களையும், மத்ஹபுகளையும் உருப் படுத்திய பெரியார்களி லெல்லாம் இமாம் அவர்களே முதல்ஸ்தானம் பெற்றவர்கள். அவர்களுடைய மத்ஹபான ஹனபி மத்ஹபுக்குப் பின்னரே மற்ற மூன்று மத்ஹபுகளும் தோன்றின. நபிகள் பெருமானின் அத்யந்த நண்பர்களும் பின்னெழுந்த மேதாவிகளும் அவரவர் பெற்றுள்ள அறிவுப் பொக்கிஷம் யாவற்றையும் விவேகத்துடன் மனனஞ் செய்து இதயங்க ளென்னும் பெட்டிகளுள் மறை பொருளாக வைத்திருந்தனர். அன்னவர்கள் அனைவரும் உலகை விட்டு மறைவது கொண்டு இதயத்தே உள்ள அவ்வறிவுப் பொக்கிஷம் மறைந்து போவதை யஞ்சியும் பிற்கால மக்களின் நலனைக் கருதியும், அவர்கள்

அரும் பாடு பட்டு, அவைகளைப் பெற்று பலதரப்பட்ட சட்டங்களாக வும், சட்டத் தீர்ப்பு (பத்வா) களாகவும் அமைத்து மனித சமுகத்துக் குத் தேவைப்படும் திட்டங்கள் நிறைந்த ஏடுகளாக உருவாக்கி ஹனபி மத்ஹபை ஸ்தாபித்தார்கள். அதன் பின்பே ஏனையோர் அவர்களின் அடிச்சுவற்றைப் பின்பற்றினார்கள். இன்று நமது கண்முன் காட்சி தரும் சட்ட கிரந்தங்க ளெல்லாம் அவர்கள் காட்டிய ஞான வழிகளின் தியாகச் சின்னங்களே யாகும்.

## பட்டம் பதவியை உதறித் தள்ளல்

பட்டம் பதவி ஏற்றுப் பிறரால் பாராட்டப் படவேண்டும் என் பதே மனிதனின் உள்ளத்தில் இயற்கையிலேயே ஆழப் பதிந்த அவா. ஆனால், பட்டம் பதவி ஏற்று பிறர்மீது அதிகாரம் செய்வதனால், தன் னைப் பற்றியோ தன்னிலையைப் பற்றியோ உணர அத்தியாவசிய மற்றுப் போம் என்றிருக்கு மாயின் பட்டம் பதவியில் என்ன பயன்? பட்டம் பதவி ஏற்றப் பின்னரும் அவன் நீதி நெறியோடும், நன்னடத்தை யோடும் வாழ கடமை பட்டுள்ளான். எனவே அதில் சற்று வழு ஏற்படு மானால் விளையும் தீமைகள் அவனையே சாரும். ஆதலால்தான் அதைத் தீர அறிந்தே இமாம் தமது உள்ளத்தில் வெறுப்புண்டு அஃதோர் பாரமான சுமையாகவும், முற்றும் தீமைக்கே உறவிடம் என்பதாகவும் உறுதிப் படுத்தி பட்டம் பதவியை மறுத்தார்கள். எக்காரணம் கொண்டு மறுத்தார்களோ அக்காரணத்தை உணராத கொடிய அதிகாரி களால் அவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள்.

ஒரு தடவை "ஸிரியா" நகர் அதிபதி தம்முடைய பொருட் பொக்கிஷத்தின் திறவு கோலை இமாமிடம் ஒப்புவித்து அதற்கு பாதுகா வலராக அவர்களை நியமித்தார். அவர்கள் அதை மறுக்கவே அதிபதி யின் கட்டளைப்படி தலை குனிய வைத்து முதுகில் பலமாக தாக்கப்பட் டார்கள். 'இராக்' தேசாதிபதியும் பனூ உமையாக்களின் கடைசி அரசருமான அமீர் மர்வானின் ஆட்சிகாலத்தில் இபுனு ஹுபைரா வென்னும் தலைமை அதிகாரி இமாம் அவர்களை கூபாவுக்கு நீதிபதியாக வும் பொதுப் பொக்கிஷத்தின் (பைத்துல் மாலின்) தனதிகாரியாகவு மிருக்கக் கட்டளை யிட்டார். அவர்கள் அக்கட்டளையை ஏற்க மறுத்த போது நாளொன்றுக்கு பத்து கசையடி வீதம் 10 தினங்கட்கு 100 கசையடிகள் பெற நியமிக்கப்பட்டார்கள். அவ்வாறு கசையடிகள் பெற்றும், தமது எண்ணத்தை மாற்றாமல் மக்காவுக்குச் சென்று அங்கு சிறிது காலம் தங்கி பிறகு அப்பாஸிய்யா வர்க்கத்தில் மன்ஸூருடைய கிலாபத் ஆட்சியில் மீண்டும் அவர்கள் அங்கு திரும்பினார்கள். எனவே அப்போதும் அவர்கள் இராக் தேச நீதிபதியாக விருக்க கலீபா மன்ஸூ ரால் நியமிக்கபட்ட போது அவ்விருவருக் கிடையே நீண்ட வாக்குவாத மும் முற்றி முடிவில் கசையடி பட்டுச் சிறையில் தள்ளப் பட்டார்கள்.

187029

தொடர்ந்து 12 தினங்கள் அச்சிறையிலும் அவர்கள் பலமாக தாக்கப் பட்டதனால் அவர்கள் இரண்டு கெண்டைக்கால் வழியாக குருதி பீறிட்டோடியது. பிறகு பலாத்காரம் பிரயோகித்து விஷம் கலந்த ஒரு பானத்தை அருந்தச் செய்து அவர்களை கொன்றுவிட முடிவு செய்யப் பட்டது. ஆகவே அவர்கள் பாண அறிகுறியை அறிந்து எங்கும் நிறைந்த ஏசப்பரம் பொருளான அல்லா (ஹ்) வுக்குச் சிரந் தாழ்த்தி ஸுஜூதில் வீழ்ந்தார்கள். அன்றேற அன்னவர்களின் ஸுஜூதிலேயே அவர்களுடைய பரிசுத்த ஆவி பிரிந்தது.

சுடர்களுடைய பெரு நெருப்பு நம்மீது படிதலை ஒத்த துன்பங்களை ஒருவன் செய்தாலும், அவன் மீது நாம் கோபம் கொள்ளா திருக்கக் கூடுமாயின் அது நன்று என்பதை விளக்கும் வள்ளுவர் கூற்று இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

"இணர் எரிதோய் வன்ன இன்ன செயினும், புணரின் வெகுளாமை நன்று"

## இமாமின் குணாதிசயங்கள்

"தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்" என்றாள் ஔவை. ஆண்டவனால் அடையப் பெறும் சகல செல்வங்களும் நல்வினையின் பயனாக உள்ளன. அருந்தவம் பூண்டொழுகிய தபசிகளே இறைவனின் சமீபத்தில் வீற்றிருப்பர். இத்தகைய சிறந்த அறப் போதனையை முன்மாதிரியாகக் கொண்ட நமது இமாம் தவத்தால் மேலிட்டவர்களென்றும், இறைவன் பால் பூரண பக்தியுடையவர்களென்றும் நன்கு பிரபல்ய மடைந் திருந்தார்கள். இரவு முற்றாக தூக்கத்தை ஒழித்து திரிகரண சுத்தியோடு மெய்ப் பொருளான அல்லாஹ்வை ஸ்தோத்திரம் செய்து கடுந்தவம் புரிந்தார்கள். எனினும் மருமைதான் அவர்களுக்கு வாக்களிக்கப் பட்ட தவணை. அம்மருமை மிக்க திடுக்கமானதாயும் மிகக் கசப்பானதாயும் உள்ளது. குர்ஆன் 55-46: என்னும் திருமறையின் வசனத்தை அவர்கள் ஓதுகையில் மரு உலக சிந்தனையில் ஆழ்ந்தவராக அவ்வசனத்தைத் திரும்பத் திரும்ப ஓதுபவராய் இருப்பார்கள். இறைவனருளும் அவனது ஆசீர்வாதமும் தர்மவான் மீதே சார்ந்திருக்கின்றன. "எவருடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கின்றதோ, அவரையே நான் மகாத்மா என்பேன்" என்றார் ஓர் அறிஞர். இத்தகைய வாக்கியங்களைச் சரியாக உணர்ந்தே இமாம் அவர்கள் சதா தருமம் செய்வதும், ஏழைகள், உற்றார், உறவினர், கடன் தீர வழியின்றித் தவிப்போர், இல்வாழ்க்கை நடத்த வகையற்றோர், எழ்னம தனத்தால் யாசகம் புரியாமல் தானிருக்க வேண்டிய நிலையிலிருந்து கண்ணியமாகக் காலம் கழிப்போர் சகலரையும் கண்டு மனங் கலங்கியவர்களாக அன்னவர்களுடைய இல்லங்களைத் தேடிச் சென்று உள்ளன்போடு பரோபகாரங்கள் பல செய்துள்ளார்கள்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் கூற்றுக் கிசைந்தாற் போல் இமாம் அவர்கள் தங்களின் வாழ்க்கையை செவ்வனே நடத்திச் சென்றுள்ளார்கள். இமாம், சமமான தேகக் கட்டுடையவர்கள், சிவப்புக் கலந்த வெண்மை நிறமுடையவர்கள், செந்தாமரை போன்ற புன்னகை தவழும் முகவழகுடையவர்கள், சற்குணத்தையே ஆபரணமாய் கொண்டு அக்கால மக்களிடையே ஜோதி மயமாய் விளங்கினார்கள். சாந்தமே உருவா யமைந்தவர்கள். அன்னவர்களிடம் முறட்டு சுபாவமோ, இன் சொல்லோ எதுவும் காண்பதற்கு முடியாமலிருந்தது. மாந்தரிடையே கருமேகம் போன்று கவிழ்ந்திருந்த அஞ்ஞானத்தையும், வீழ்ச்சியையும் போக்கி ஞானத்தையும் எழுச்சியையும் பிரதி பலிக்கச் செய்து, எங்கும் நல்வழி, உதிக்க அல்லும் பகலும் அனவரதமும் அரும்பாடு பட்டு ஒப்பற்ற தியாகியாக விளங்கினார்கள்.

இத்தகைய பெருமை மிக்க பெரியார் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 150-வது வருடத்தில் ரஜப் மாதம், தங்களின் 70-வது வயதில் (கி. பி. 772) பஃதாதில் காலமானார்கள். அவ் வருடத்திலேயே (அல்லது அவர்கள் தேக வியோகமான அந்நாளிலேயே) அல் இமாம் ஷாபியி (ரஹ்) ஜனனமானார்கள். இமாம் அவர்களின் முன்னறிக்கைப்படி பஃதாதின் கிழக்குத் திசையை நோக்கிச் செல்லும் ஹைஸரான் என்னும் மயான பூமியில் அவர்கள் நல்லடக்கம் செய்யப் பட்டார்கள், நவ்வரல்லாஹு லரீஹஹு.


## மஜ்மூஅ முனாஜாத்.

**சுத்த தமிழ்**

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்குபேரில் முனாஜாத்து, யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலைப் பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், ஸரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா. 8 ஷை அரபுத் தமிழ் விலை ரூ. 1–4–0

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இறைவனே அருள்வாய்!

(வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாஸன்)

குறையாது மணுகாது குவலயத்தே
நிறைவாழ்வின் மதியோடு முக்தியுற
மறையாவும் மாந்தர்குல நலனுக்கென்றே
அறைகூவி அனவரதம் வழங்கும் வல்லா. (1)

அறிவுடைமை என்றதொரு பெயரினுள்ளே
பொறிந்தெழும் அணுச்சாரப் பூசல்மாய
நெறிகளினை அன்னோர்கள் நெஞ்சில்தேங்கி
பறித்தியாகப் பண்பாட்டில் பழகச் செய்வாய். (2)

பல்வேறு பிரிவினைகள் பிணக்கிடையே
அல்லலுறும் அரசியலார் ஆய்ந்துணர்ந்து
நல்லதொரு வரையறையில் ஒன்று சேர்ந்து
வில்லற்சரியப் புகழ் எய்ய வகையருள்வாய். (3)

சூழ்வினையால் சுட்டு வீழ்த்தும் சுதந்திரத்தில்
பாழ்ப்பட்டு பன்கலைத் திரன் தளர்ந்து
தாழ்வுறுத்தும் பசியின் கோரப்பிடியில் மாளும்
ஆழ்சிந்தை அறிஞர்கட்கோர் அமைதிஈவாய். (4)

எண்ணற்ற இளவல்கள் கண்ணீர்பல்க
தென்னாட்டின் எல்லையினிற் குரலெழுப்பி
புண்ணெனவே பரதேசிக் கோலம் தாங்கி
மண்ணில் புகும் பரிதாபம் களைந்தெறிவாய். (5)

பிறர்திருத்தம் பகருகின்றப்பேதமையோர்
இருளறநின்சமுகம் யாண்டும் விழைந்து
மருகின்றதன் தவறின் பிழைப்பொறுக்க
சிரம்தாழ்த்தி ஐங்காலம் வணங்கச் செய்வாய். (6)

வெளிவந்து விட்டது!     புதிய பதிப்பு!!

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் னுஃமான்.

(ஹனபி மதுஹபுக் குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம்மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக் கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையுங் கற்றறிந்து அமல்செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய வும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக: ஈமான், இஸ்லாம், கலிமா பரிசுத்தம், தொழுகை ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கமும் இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கியிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்-புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓதவேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அமைக்கப் பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியவரும்.

இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் பத்ஹுர் றப்பானி பீ பிக்ஹே நிஃமானி

இதன் விலை ரூ. 6

கிடைக்குமிடம்:-

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# ஸைபுல்லாஹ்

(M. S. காஜாமுஈனுத்தீன், M. M. H. A. காலேஜ், நீடூர்.)

இஸ்லாத்தின் உடைவாள் எனப்படும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இஸ்லாமிய இராணுவத்தின் நிகரற்ற வீரத் தளபதியாக திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) வாள் வீச்சிலும் பிரபல்யமானவர்கள்; புனித ஹிஜ்ரி எட்டாம ஆண்டிற்குப்பின் ஒவ்வொரு ஜிஹாதிலும் பங்கெடுத்துக் கொண்டு சென்ற விடமெல்லாம் ஜெய பேரிகை கொட்டி வந்தார்கள். புறத்திலே புஜபலத்தாலும் அகத்திலே அன்பாலும் ஆத்மீக சக்தியாலும் எதிரிகளிடத்து போர் புரியும் பண்பு அவர்களிடம் அமைந்திருந்தது. எந்த அணியை நோக்கி முன்னேறிச் செல்கின்றார்களோ அந்த அணி காலியாகவே காட்சி யளிக்கும். எதிரிகளின் படை பலம் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் இராணுவத்தினருக்குள் ஊடுருவிப் பாய்ந்து மின்னல் வேகமாகப் போர் புரிவார்கள். இன்னும் ஹஜ்ரத் காலித் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களை ஒழித்துக் கட்டுவதில் முன் நின்று வேலை செய்வார்கள். அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்திலே முஸைலமா வென்னும் பொய் தீர்க்கதர்சியை அடியோடு ஒழித்துக் கட்டி இறந்த இடத்திலேயே எருக்கு முளையும் படியாய்ச் செய்தவர் இந்த ஸைபுல் இஸ்லாமேயாவர். சுறுங்கக் கூறுமிடத்து "காலித் (ரலி)" இஸ்லாத்திற்கு ஓர் ஈடிணையற்ற போர் வீரராய் விளங்கி வந்தார். இவர் சென்ற இடத்தி லெல்லாம் வெற்றி யென்பது இவரது பாதாரவிந்தத்தினை வந்து முத்தி யிட்டுக் கிடக்கும் காரணத்தால், பெருமானார் (ஸல்) அவர்கள் வீரத் தளபதியான காலிதுச்கு ஸைபுல்லாஹ் என நாமம் சூட்டினார்கள்.

இத்தகைய பராக்ரமசாலியான காலித் (ரலி) அவர்கள் மீது ஒரு விடுத்தம் ஒரு குற்றம் சுமத்தப்பட்டது......இவர் தம்மைப் பற்றிப் புகழ்ந்து பாடிய தம்முடைய நண்பரான புலவர் ஒருவருக்கு அரசாங்க பொக்கிஷமான பைத்துல்மாலி லிருந்து பதினாயிரம் திர்ஹம் இனாமளித்து விட்டாரெனப் புகார் கூறப்பட்டது. முஸ்லிம் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட பைத்துல்மால் ஒரு மிகவுஞ் சிறந்த பரிசுத்த மிக்க அமானத் தென்று கருதப்பட்டு வந்தது. ஆதலால் கலிபா உமர் (ரலி) அவர்கட்கு காலித் (ரலி) மீது அடங்காக் கோபம் பிறந்து விட்டது. எனவே பிலால் (ரலி) அவர்களை அனுப்பி அக் குற்றச்சாட்டைப் பகிரங்கமாக விசாரிக்கும்படி சொன்னார்கள்.

பிலாலென்பார் ஒரு கருநிற சுருட்டை மயிரும் தடித்த உதடும் வாய்க்கப்பெற்ற நீக்ரோவா (ஹபஷீயா) யிருந்தார். காலித் (ரலி) அவர்களுடைய ஓர் உறவினர் பால் அடிமையா யிருந்து ஆதியிலேயே இஸ்லாத்தை தழுவிக் கொண்டவர். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களால் முதல் முஅத்தினாக–தொழுகைக்குப் கூப்பிடும் மனிதராகப் பெருமைப் படுத்தி உயர்த்தப் பெற்றிருந்தமையால் அந்த பிலாலுக்கு மிகவாயே மேதை மரியாதைகளெல்லாம் அளிக்கப்பட்டு வந்தன. அங்ஙனமே பிலால் (ரலி) காலித் பெருஞ் சேனையுடன் பாடி, வீடு சென்று கொண்டிருந்த ஹம்ஜென்னும் தலத்திற்குப் போய் சேர்ந்தார். அங்குள்ள ஜாமீயா மஸ்ஜிதில் அந்த நீக்ரோவர் காலித் (ரலி) மீது கொண்டு வரப் பட்ட கேஸைப் பகிரங்கமாக விசாரிக்கத் தலைப்பட்டார். அவர் அந்த மாபெரும் தளபதியைப் பார்த்து "ஏ, காலித்! நீர் அந்த கவிவாணனுக்கு அளித்த தொகை உமக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று உரக்க வினவினர். அது கேட்டு காலித் (ரலி) திடுக்கிட்டு முகம் சோர்ந்து மௌனியாய் நின்றார். அவருக்கு அக்கணமே தொண்டை வறண்டு விக்கிக் கொண்டது, விடை கூற நாவெழவில்லை. அது காலை அவருடைய நிலைமை அதிக சந்தேகத்திற்கு இடம் கொடுப்பதாய் விட்டது. அக்கணமே பிலால் (ரலி) தமது கரத்தை நீட்டி காலிதின் தலப்பாகையைத் தட்டி விட்டு அதனைக் கொண்டு அச்சேனாதிபதியின் கைகளிரண்டையும் ஒரு கள்வனுடைய கைகளை கட்டுவது போல் கட்டி விட்டார். அங்கு கூடி யிருந்த ஜனங்களெல்லோரும் வாய்பொத்தி மௌனிகளாய் வாளா நோக்கிக் கொண்டிருந்தார்கள். காலித் (ரலி) ஹஜ்ரத் பிலாலை தாமொரு குற்றமும் இழைத்தநில்லையென அருத்தப்படும் முறையிலே உற்று நோக்கினர். "ஏ, காலித் நீர் அந்த கவிவாணனுக் களித்த தொகை உமக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று பிலால் மீண்டும் தமது கடாவினை வேகமாய் விடுத்தார். அப்பொழுது லஜ்ஜை யுற்று நின்ற காலித் (ரலி) "அஃதெனது சொந்தப் பணத்திலிருந்து கொடுக்கப் பட்டது. பைத்துல்மாலி லிருந்து யான் ஒரு பைசாவும் எடுக்கவில்லை" என்று அமைதியுடன் விடை பகர்ந்தார். யான் அயோக்கியதனமாய் ஒன்றையும் திருடவில்லை என்பதாக கூறினர். பிலால் (ரலி) காலித் (ரலி) கூறியதின் இச்சமாதானத்தை உண்மையை உள்ளவாறு விசாரித்துத் திருப்தி யடைந்து கொண்டார். அப்பொழுதே அவருடைய கைகளை அவிழ்த்து அவருடைய தலைப்பாகையையும் அன்னவரிடமே கொடுத்து பின் வருமாறு சமாதானம் கூறினர். "காலித்! உம்மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு பொய் என்று உறுதியாய் விட்டது. நீர் எப்பொழுதும் போலவே இனியும் அமீராகவும் முஸ்லிம் கம்மாண்டராகவும் இருந்து வரக்கடவீர். !!" உடனே அல்லாஹு அக்பர் என்னும் தொனி வானைப் பிளக்களாயிற்று. அப்பால் அவர் மீண்டும் மாபெரும் தலைவராகவும் தளபதியாகவும் உயர்ந்து விளங்கலாயினர்............

மாயமாய்

# மறைந்த மங்கை.

## (தொடர் கதை 9–வது பகுதி)

### அத்தியாயம் 16

ஒலிவா கட்டுகள் அவிழ்க்கப்பட்டதும் "மிஸ்டர் ரோஸன் உங்களை இனி காணமுடியாதென்றே தீர்மானித்தேன். உங்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் ஒரு வார்த்தையாவது என் இஷ்டத்திற்கு எழுதவில்லை" என்று சொல்லி தேம்பி தேம்பி அழுதாள்.

"எந்த கடிதம்?" என்று ரோஸன் கேட்டார்.

"எனக்குக் கிடைத்தது அக்கடிதம். அது உங்களுக்கு எழுதப் பட்ட கடிதமாயிருந்தும் நான் உடைத்துப் பார்த்தேன். வற்புறுத்த லின்பேரில் எழுதிய கடிதமென்று அறிந்தேன்" என்றார் ஷம்ஸ்.

"அக்கடிதத்தை அந்த அறையிலிருக்கும் மனிதருக்காக எழுதி னேன்" என்று சொல்லி இன்னொரு அறையைச் சுட்டிக்காட்டினாள். இதற்குள் அங்கு மூன்று போலீஸ் கான்ஸ்டேபிள்களும் வந்தனர். அவர்களுடன் தாமஸ், ஒலிவா காட்டிய அறையினுள் சென்றனர்.

"எனக்கு எல்லாம் கனவுபோல் தோன்றுகிறது. அவர்களெல்லாம் இரக்கமில்லா பாவிகள்! அந்த அறையிலிருக்கிறாரே அவரை இவ்வீட் டிற்கு தூக்கிகொண்டு வரும்போது, ஒரு பிணமென்று நினைத்தேன். ஆனால் அவர் சாகவில்லை யென்று பின்னறிந்தேன். அவரின் கால்பெரு விரல்களில் கயிறு கட்டி, தலை கீழாக தொங்கவிட்டார்கள். அவர் அவஸ்தைபடுவதை எனக்கு காண்பித்து, அவர்கள் சொல்லியபடி நான் கடிதமெழுதாவிட்டால், அவருக்கு உபத்திரவம் செய்து கொண்டே யிருப்பதாகவும் நான் கடிதம் எழுதினால் அவரைவிட்டு விடுவதாகவும் எனக்குச்சொன்னார்கள். அவர் முகத்தைப் பார்க்க பரிதாபகரமாயிருந்தது. அதைப்பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. அவரைக் காப்பாற்ற அக்கடிதத்தை எழுதினேன்" என்றாள்.

அங்கு தாமஸ் வந்து "அவ்வறையில் ஒருமனிதன் மிகபலஹீன மாயிருக்கிறான் ரேனிபர்க்காக யிருக்கலாம்" என்றார். அவருடன் எல்லோரும் சென்று அறையினுள்பார்க்க, ஒரு கட்டிலின்பேரில் ஒரு மனிதனை படுக்கவைக்கப்பட்டிருந்தது. அவனது கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருந்தது; மிக பலஹீனமாக கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கொண்டு இருந்தான். கால்விரல்களில் கயிறுகட்டியதால் ஏற்பட்ட காயம் கொப்பளித்திருந்தது; தலையிலும் ஒரு கட்டுகட்டி யிருந்தது.

"ஆம் இவர் ரேனிபார்க்தான். இவரை கோர்ட்டில் பார்த்திருக்கிறேன்" என்றார் ஷம்ஸ். இதற்கிடையில் அங்கு மேரியாவும் வந்து இதையெல்லாம் ஆச்சரியத்துடனும் கவலையுடனும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சரி இவர் ரேனிபார்க்கா யிருக்கலாம். இருந்தாலும் நாம் ஒரு ஆளை விட்டு விட்டோமே! பிரபஸர்! இக்கூட்டத்திற்கு தலைவரான அந்த பிரபஸர் வெஸ்டர்பியைக் கொன்றவன்! அவனல்லவா அகப்பட வேண்டும்" என்றார் தாமஸ்.

"ஆம் பிரபஸர் காணவில்லை! இரண்டு வீடுகளையும் நன்றாக உமது போலீஸ் ஆட்கள் தேடினார்களா?" என்று ஷம்ஸ் கேட்க "ஆம்" என்று சொல்லிக்கொண்டே தாமஸ் லிப்ட்மூலம் சென்றார். கொஞ்ச நேரத்தில் திரும்பிவந்து "எல்லா ரெயில்வே ஸ்டேஷன்களிலும் மெயின் ரோடுகளிலும் பிரபஸரைக் கவனிக்குமாறு போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன்மூலம் தெரிவித்துவிட்டேன்" என்று சொன்னார். இதற்கிடையில் ஷம்ஸ் ரேனிபர்கின் கையிலுள்ள விலங்கை கழட்டிவிட்டார். ரேனிபர்க் கொஞ்சம் உசும்பினார். அவரைத்தூக்கி வாயில் கொஞ்ச ஜலம் ஊற்றினார்கள்.

"இவரை இவ்வீட்டிற்கு கொண்டுவர எற்பாடு செய்ததுடன் என்னையும் என் தங்கவிட்டார்களென்பதுதான் தெரியவில்லை" என்றாள் ஒலிவா. "எங்கோ ஒரு தவருதல் எற்பட்டுவிட்டது. நீ வருவது தெரியாதிருக்கலாம் அல்லது நீ வரும் தேதி மறந்திருக்கலாம்" என்றார் ஷம்ஸ்.

"இன்னொரு வீட்டில் கொலை செய்ய நேர்ந்தது. யாரை கொலை செய்தார்களென்று அவர்களுக்குத் தெரியாது. போலீஸைச் சேர்ந்தவனென்று நினைத்திருப்பார்கள். போலீஸ் அதில் தலையிடுவதற்குமுன் அவ்வீட்டில் பிடித்துவைத்திருந்த ரேனிபர்கை இங்கு கொண்டுவந்து விடுவது நலமென்று செய்திருப்பார்கள். அச்சபயத்தில் நீ வந்து மாட்டியிருப்பாய்" என்றும் ஷம்ஸ் சொன்னார். இவ்வாறு ஷம்ஸ் சொல்லிக் கொண்டிருக்கும் போது, கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த ரேனிபர்க் சிரித்தார். வாய் உளரினார். "ஜனி மேலாடிருக்கிறது போலும்" என்று தாமஸ் சொன்னார்.

"என்ன சொல்கிறார்! முன் ஹாலிவுட்டில் சினிமா நடிகராக யிருந்ததைப் பற்றி சொல்கிறாரா?" என்று தாமஸ் கேட்டார்.

"அதைப் போல் தான். அவர் உளருவது என்னென்று மற்றவர்களுக்கு தெரியா விட்டாலும் எனக்குத் தெரியும்" என்று ஷம்ஸ் சொன்னார்.

"அது என்ன ?" என்று பின்னால் நின்று கொண்டிருந்த சோடே கேட்டான்.

"தற்போது சொல்லலாம். அநேக வருடங்கள் கழிந்து விட்டன. ரேனிபர்க் கடைசியாக நடித்த "ஜக்கர் நாட்" என்னும் படம் ஞாபக மிருக்கிறதா?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"அப்படத்தை பார்த்த ஞாபக மிருக்கிறது" என்று தாமஸ் சொன்னார்.

"அப்படம் எடுத்து முடிவதற்குள் ரேனிபர்க்கு ஏதோ நோயினால் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு நடிக்க முடியவில்லை. அச்சமயத்தில் அப் படத்திற்காக 10 லக்ஷம் டாலர் செலவழிக்கப்பட்டிருந்தது. ரேனி பர்கை பரிசோதித்த டாக்டர்கள், இனி ரேனிபர்கால் நடிக்க இயலா தென்று தெரிவித்து விட்டார்கள்."

"பின் என்ன நடந்தது ?"

"அமெரிக்கா பூராவும் ரேனிபர்கைப் போலுள்ள மனிதன் யாரா வது உண்டா என்று தேடினார்கள். அவ்வாறு அகப்பட்டால் அவனைக் கொண்டு படம் பூர்த்தி செய்யலா மென்று. இவ்வாறு தேடியது மிக இரகசியமாக. கடைசியாக ஒருவனைக் கண்டு பிடித்தார்கள். எங்கு! ஸிங்ஸிங் என்னும் ஜெயிலில்."

"என்னிடமும் அந்த கம்பெனி ஆட்கள் வந்து, இங்லாந்தில் ரேனிபர்க்கை போல் யாருமுண்டோ வென்று கவனிக்குமாறு அச்சமயத் தில் கேட்டார்கள். அதற்கு ஒரு மாதம் முன் நான் அமெரிக்காவுக்கு போயிருக்கும் போது ரேனிபர்கை சந்தித்திருக்கிறேன்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே ரேனிபர்க்கைப் பார்த்தார். ரேனிபர்க் உஷாரில் லாமல் தூங்கிக் கொண்டிருந்தார்.

"அப்படத்தை எடுத்து வந்த டைரக்டர், ஜெயிலில் தண்டனை அனுபவிப்பவர்களின் போட்டோக்களுள்ள ரெகார்டை திருப்பிப் பார்க்கும் பொழுது, மில்லர் என்றொருவன் போட்டோ ரேனிபர்க்குக்கு ஒத்திருந்தது. அவன் ஜெயிலில் தண்டனை அனுபவிக்கும் காலம் முடியுந் தருவாயி லிருந்தது. அவன் உயரத்திலும் பருமனிலும் பார்வையிலும் ரேனிபர்கை ஒத்திருந்தான். அவனைக் கொண்டு அப் படம் பூர்த்தி செய்யப்பட்டது. அப்படத்தை பார்த்த ஜனங்கள் நடிகர் மாறியதை அறியவில்லை."

"ஆம். நானும் அப்படத்தைப் பார்த்தேன். ஆக்டர் மாறியது எனக்கு தெரியாது" என்றார் தாமஸ். இச்சமயத்தில் அவ்வறையின் மூலையிலுள்ள ஒரு திறையை அங்கு நின்ற ஒரு கான்ஸ்டேபிள் ஒதுக்

கவே, அங்கு மறைத்து வைக்கப்பட்ட டிக்டாபோன் ஒன்று தெரியலாயிற்று. இது வெஸ்டார்பி கொல்லப்பட்ட வீட்டிலிருந்த டிக்டாபோனைப் போலவே யிருந்தது.

"நாம் இங்கிருந்து வெளியே போகலாம். மனிதன் அவஸ்தைப் பட்டதும், ஒருவன் நொண்டிக் கொண்டே வந்து என்னை பயமுறுத்தியதும், எனக்கு மயக்க மருந்து கொடுத்ததும் ஞாபகம் வந்து கொண்டேயிருக்கிறது. இவ்விடத்தை விட்டு வெளியில் போகலாம்" என்று ஒலிவா ரோஸனிடம் சொன்னாள்.

"உனக்கு மயக்க மருந்து கொடுத்தார்களா? என்றைக்கு கொடுத்தார்கள்?" என்று ஷம்ஸ் கேட்டார்.

"இரண்டொரு தடவை கொடுத்தார்கள். என்னை மெத்தையில் பிடித்தார்களே அப்பொழுதும், மறுநாள் காலையிலும், எனது கையைப் பிடித்து ஏதோ மருந்தை இன்ஜக்ஷன் செய்தார்கள். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

"இது மிகவும் முக்கியமானது. ஒரு வஸ்தை கட்டாயம் தேட வேண்டும்" என்று ஷம்ஸ் சொல்லிக் கொண்டே அவ்வறையில் தேடினார். பிறகு அடுத்த அறைக்கு வந்தார். அங்கும் அகப்படவில்லை. லிப்ட் உள்ள ஹாலுக்கு வந்தார். அதற்குள் அங்கிருந்த ஜான், டொனல்ட், லூஸி மூவர்களையும் போலிஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போகப் பட்டனர். அங்கு ஹாலில் சில போலிஸ் கான்ஸ்டேபிள்கள் நின்றனர். அவர்களிடம் "இங்கு ஏதாவது சாமான்கள் ஒளித்து வைக்கக்கூடிய இடமுண்டா?" என்று கேட்டார். "அந்த மேஜையின் டிராயர் பூட்டப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது மறைத்து வைத்திருக்கலாம்" என்றார்கள். உடனே ஷம்ஸ் தனது ஜேபியி லிருந்து ஒரு ஆயுதத்தை எடுத்து அதன் உதவியால் அந்த டிராயரைத் திறந்தார். அதனுள் அவர் தேடிய டிக்டபோன் டெகார்ட் ஒன்றிருப்பதைப் பார்த்து மிக சந்தோஷமானார். அதை எடுத்துப் பார்த்தார் அது உபயோகப்படுத்தப் பட்டிருந்தது. அத்துடன் ரேனிபர்க் உள்ள அறைக்குப் போனார். அதை டிக்டாபோன் மிஷினினருகே போய் அந்த ரெகார்டை அதில் மாட்டிக் கொண்டே, "நான் ஹாலிவுட்டில் ரேனிபர்க்வுடன் பிலியர்ட்ஸ் ஆடி யிருக்கிறேன். அவர் மிக நன்றாக ஆடினார். ஆனால் அவர் லண்டனுக்கு வந்த போது என்னுடன் பிலியர்ட்ஸ் ஆடபிரியப்படவுமில்லை. வற்புறுத்தியதின் பேரில் ஒரு ஆட்டம் ஆடினார். மிகவும் மோசமாக ஆடினார்." என்று ஷம்ஸ் சொன்னார்.

"அவருக்குத்தான் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டதாக சொன்னீர்களே அதனால் லண்டன் வந்திருக்கும்போது ஒழுங்காக ஆடமுடியா திருக்கலாம்" என்று தாமஸ் சொன்னார்.

"இல்லை அவர் மெக்ஸிகோ போய் ஒரு சுரங்கம் வாங்கி அதை நடத்தும்போது, மில்லரையும் கூப்பிட்டு தன்னுடன் வைத்திருக்கும் போது, நரம்பு தளர்ச்சி எல்லாம் நீங்கி நல்ல திடகாத்திரத்துடன் யிருந்ததாக கேள்வி. அவ்வாறிருக்கும் போது நல்லவிதமாக ஆடி வந்த பிலியர்ட்ஸ் மறந்து விடாது" என்றார் ஷம்ஸ்.

"நீங்கள் சொல்வதே எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்று தாமஸ் கேட்க "கொஞ்ச நேரத்தில் எல்லாம் விளங்கும். இங்கு வாருங்கள்" என்றார் ஷம்ஸ்.

தாமஸ் ஷம்ஸினருகே போய் டிக்டாபோனைப் பார்த்த வண்ணம் நின்றார்.

அந்த டிக்டாபோனில் மாட்டப்பட்ட ரெகார்டிலிருந்து கீழ் கண்டவாறு சப்தம் வந்தது:—

"சொல்லு ரேனிபர்கை நீதான் கொன்றாய்"

"வாயை மூடு" இன்னொரு சப்தம்.

"ஒரு மணிநேரமாக அதையே சொல்கிறாயே. அது அவ்வளவும் பொய். என்னை பைத்தியக்காரனாக்குகிறீர்களே"

"நாங்கள் அதையே தான் சொல்வோம். அது தான் உண்மை'

"நீயும் எங்களைப்போல் ஒரு திருடன். ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறாய். உனது விஷயம் எங்களுக்குத் தெரியா விட்டால் உன்னை ஏன் இங்கு பிடித்து வைத்திருக்கிறோம். நீ செய்யும் தொழிலும் எங்களுக்கு தெரியும். நீதான் அவனை சாவடித்து மெக்ஸிகோவிலேயே புதைத்து விட்டாய்" என்று இன்னொருவன் பேசுவது போல்கேட்டது.

"நான் செய்யவில்லை! நான் செய்யவில்லை. எனக்கு உடம்பு நன்றாகயில்லை. எனக்கு தூக்கம் வருகிறது. என்னை விட்டுவிட்டு போங்கள்"

"உண்மையைச் சொல்லு"

"என்ன சொல்ல வேண்டும். நான் ரேனிபர்க் அல்ல. அதுதானே நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நான் அவனைக்கொல்ல வில்லை. ரேனிபர்கை நான் கொல்லவில்லை. ஏதோ உடம்பு அசௌகரியத்தினால் இறந்தான். நான் அவனை புதைத்தேன். பிறகு 2 வருடம் அவன் கையெழுத்தைப்போல் எழுதவும், அவனைப்போல் நடை, உடை, பேச்சுகளில் பழகினேன். லண்டனில் அவனுக்கு சேர வேண்டிய பணத்திற்கு தாவா செய்தேன். பாவிகளே! போதுமா? எல்லாம் சொல்லி விட்டேன். இருந்தாலும் இதை நீங்கள் வெளியில் சொன்னால் உங்கள் பேச்சை யாரும் நம்ப மாட்டார்கள். அவ்வளவுதான்.

நீங்கள் என்னை எவ்வளவு மிறட்டினுலும் உங்களுக்கு ஒன்றும் பிரயோஜனப்படாது"

"ரேனிபர்க் இறந்து விட்டானு! அப்படியானுல் இதுயார்?" என்று தாமஸ் கேட்டார்.

"இவன் ஜெயிலிலிருந்து வந்த மில்லர்" என்ருர் ஷம்ஸ்.

"ஆனுல் ரேனிபர்க் பேசும் போது, சிறு குழந்தைகளைப் போல் வழவழ என்றல்லவோ பேசுவான். இவனும் அவ்வாறு தான் பேசுவானே"

"இல்லை. இவன் அதைப்போல் பழக்கம் செய்திருப்பான். ரேனிபர்கின் பணம் லண்டன் பாங்கில் 10 லக்ஷம் பவுண்ட் யிருந்ததே. அதை அடைய வேண்டுமென்ருல் சுலபமா? அதனுல் இவன் மெக்ஸிகோவிலேயே எவ்வளவோ நாட்களாக பழகி பழகி, அதைப்போலவே பேசுவான். ஆனுல் தற்போது ஜனியில் வாய் உளறியபோது அதைப் போலில்லை.

"ஆனுல்.........?"

"சமாச்சாரத்தை சுருக்கமாக சொல்லுகிறேன். ரேனிபர்க் இறந்து விட்டான். இவன் ரேனிபர்க் என்று சொல்லிக் கொண்டு, லண்டனிலுள்ள பணத்தை வாங்க வந்தான். என்னுடன் பிலியர்ட்ஸ் ஆடும்போது, எனக்கு சந்தேகம் வந்தது. இவன் ரேனிபர்க் அல்லவென்று சந்தேகம். நான் இச்சந்தேகத்தைக் கொண்டு, அவனுக்கு பணம் கொடுக்காதிருக்க இரகசியமாக முயற்சித்தேன். முடியவில்லை. யாரும் என் பேச்சை நம்பவுமில்லை. ரேனிபர்க் நன்ருக பிலியர்ட்ஸ் ஆடுவானும். இவனுக்கு ஆடத்தெரியவில்லை என்னும் காரணம் போதாதாம்" என்று ஷம்ஸ் சொன்னுர்.

"நீங்கள் அவன் கைரேகையைப் பார்த்து, ஜெயிலில் இருந்த மில்லரின் ரேகையை ஒத்திட்டால் தெரியுமே" என்று தாமஸ் கேட்டார்.

"ரேனிபர்க் பெரிய பணக்காரராம். 10 லக்ஷம் பவுண்டுக் கேஸ் போட்டவனின் கைரேகையை நான் எப்படி எடுப்பது. அதுவுமல்லாமல் உடனே அவன் அமெரிக்காவுக்கும் போய் விட்டான். எப்படியும் இந்த பிரபஸரின் கூட்டம் அதையறிந்து நமக்கும் காட்டி கொடுத்து விட்டார்கள்"

"இவர்கள் இந்த ரகசியத்தை வைத்துக் கொண்டு இந்த மில்லரை மிரட்டி பணம் பிடுங்க ஏற்பாடு செய்ததாக தெரிகிறது"

"ஆம்! முதலில் அவனை ஒத்துக் கொள்ளும்படி செய்து அவன் சொல்வதை டிக்டாபோன் மூலமாக பதிவு செய்தார்கள். அவன்

சொல்வதை அங்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஒலிவாவுக்கு தெரிந்து விடுமென்று அவளுக்கு மயக்க மருந்தை கொடுத்தார்கள்''

"சாண்ட்பீச் ரோட் வீட்டில் நாற்காலிகளாக சூழ்ந்து போடப் பட்டிருந்ததே, அங்குதான் முதலில் ரேனிபர்கை பிடித்து வைத்திருந் திருக்கலாம்''

"ஆம். ஆனல் அங்கு வெஸ்டர்பி வரவே, அவனை சாவடிக்க நேர்ந்தது. அக் கொலைக்குப்பின் அங்கிருப்பது உசிதமல்ல வென்று இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும்'' என்ருர் ஷம்ஸ்.

"போதும்! இவைகளைக் கேட்க மனம் தாளவில்லை. இனி எனக்கு இங்கிருப்பதற்கே இஷ்டமில்லை. கொஞ்ச தூரத்தில் என் தங்கை ஒருவள் வசித்து வருகிருள். அவளுடன் போய் வசிக்க தீர்மானித் துள்ளேன்'' என்று மேரியா சொல்லி அங்கிருந்து வெளி வந்தாள். பின்னல் ஷம்ஸும் மற்றவர்களும் வந்தார்கள்.

லிப்ட் இருக்கும் ஹாலுக்கு வந்ததும் "நில். இனி நகராதே. கையை மேலே தூக்கு. கை கீழே யிறங்கினல் சுட்டு விடுவேன். என்னையும் ஏமாற்றி விட்டாயென்று நினைத்தாயா!'' என்று ஷம்ஸ் சொல்லியவாறு தனது துப்பாக்கியை மேரியாவின் பக்கம் நீட்டினர். இதைப் பார்த்த மற்றவர்களெல்லாம் ஸ்தம்பித்து நின்றனர்.

## அத்தியாயம் 17

மேரியா அலறி நின்ருள்.

"என்ன! இவளும் இக்கூட்டத்தில் சேர்ந்தவளா!'' என்று சோடே கேட்டான்.

"நீ நினைக்கிறபடி யல்ல. அதைவிட அதிகம்'' என்று ஷம்ஸ் சோடேவிடம் திரும்பி சொல்லும் போது, ஷம்ஸின் கால் கீழிருந்த ஜம்காளத்திலுள்ள ஒரு கிழிச்சலில் மாட்டவே சமாளித்து நின்ருர். அச்சமயத்தில் கை மேரியா பக்கம் திரும்பி யிருந்தும் துப்பாக்கி கீழ் பக்கம் நோக்கியது. அதே வினடியில் அதை அறிந்த மேரியா அங்கு மேஜையின் பேரில் உள்ள ஒரு பேப்பர் பளுவிடும் கண்ணடி (Paper weight) யை எடுத்து ஷம்ஸின் பேரில் எறிந்தாள். ஷம்ஸ் அதே சம யத்தில் தன் பேரில் விழாமல் நகர்ந்து கொண்டார்.

"பார்த்தீர்களா! எந்த கையினல் அதை எறிந்தாள்! இடது கையினல்! என்ன மாறு வேஷம்! எனக்காக ஒரு கடிதம் ஒரு கல்லில் சேர்த்து ஜன்னல் வழியாக முன் வெளியிலிருந்து எறியப் பட்டது. அப்பொழுது அந்த ஜன்னலைக் கவனித்தேன். வெளியிலிருந்து கல் எறியப்பட்டிருந்தால் உடைந்த கண்ணடி துண்டுகள் ஹாலின் உட்

புறம் விழுந்திருக்கும். ஆனால் ஒரு உடைந்த துண்டாவது ஹாலி னுள் இல்லை. ஆதலால் ஹாலிலிருந்து கண்ணாடியின் பேரில் கல் எறியப்பட்டிருக்கிற தென்று தீர்மானித்தேன். ஹாலில் மேரியா மாத் திரம் அச்சமயம் தனியாக நின்றாள். அப்போது தான் இவள் பேரில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதற்குப்பின் கவனித்துவர அவள் எப்பொழுதும் தனது கழுத்திலுள்ள செயினில் தொங்கும் லாக் கெட்டை இடது கையாலேயே தடவிக் கொண்டிருப்பாள்''

"அப்படியானால் இவள் தான்—இவன் தான்'' என்று தாமஸ் சொல்வதற்குள்.

"பிரபஸர் சான்டர் வெஸ்டர்பியைக் கொன்றவன் இவன் தான்; இக்கூட்டத்திற்கு தலைவன். சிலர் பிரபஸரையும் மேரியாவையும் ஒரே நேரத்தில் இவ்வீட்டில் பார்த்திருப்பதாக நினைக்கக் கூடும். ஆனால் உண்மையில் பார்த்திருக்கமுடியாது. பார்த்திருக்க மாட்டார்கள். ஏனெனில் இருவரும் ஒரே ஆள்'' என்று ஷம்ஸ் சொன்னார். சோடே அச்சமயத்தில் மேரியாவி னருகே போய் அவள் போட்டிருக்கும் உடையைத் தடவி பார்த்தான், ஒரு சிறிய துப்பாக்கி மறைத்து வைக் கப்பட்டிருப்பதைக் கண்டு வெளியே எடுத்தான்.

தனது சூழ்ச்சி பூராவும் தெரிந்து விட்டதென்று பிரபஸர் தனது தலையில் மாட்டியிருந்ததை கழட்டினான். வாயில் இருபக்கமும் ஒதிக்கி வைத்திருந்த ரப்பரையும் கக்கினான். எல்லோரும் பிரபஸரின் முகத்தைப் பார்த்தார்கள். "நீ தான் ஜெயித்தாய்'' என்று ஷம்ஸை பார்த்து சொன்னான். உடனே தாமஸ் பாய்ந்து பிரபஸரின் கையில் விலங் கிட்டார்.

இந்த கேஸ் உலக பிரசித்திப் பெற்றது. பிரபஸருக்கு தூக்கு தண்டனையும், கூடச் சேர்ந்திருந்தவர்களுக்கு சிறை தண்டனையும் கிடைத்தன. இந்த கேஸ் முடிந்ததும் ரோஸனுக்கும் ஒலிவாவுக்கும் கலியாணம் சிறப்பாக நடந்தது. மில்லரைப் பற்றி விசாரணை நடந்தது. ரேனிபர்குக்கு சொந்தமான பணத்தை ஏமாற்றி வாங்கியதாக குற்றஞ் சாட்டப்பட்டு, சிறை தண்டனை கொடுக்கப்பட்டது. அவன் சொத்தில் 10-லக்ஷம் பவுண்டை கவர்ன்மென்ட் எடுத்துக் கொண்டு அதில் 1 லக்ஷம் ஷம்ஸுக்கு கொடுக்கப் பட்டது. ஸ்ஸெலி நல்ல சௌகரிய மானதும், ஷம்ஸ் அவளுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து அவள் இஷ்டப் பட்டபடி அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

மாயமாய் மறைந்த மங்கை முற்றிற்று.

# சாந்தம்.

மௌலவி K. H. அப்துல் கரீம் (நூரிய்யி) பேரையூர்.

மனிதனை உயர்ந்த அந்தஸ்திற்கும், நல்வழிக்கும், இழுத்துச் செல்லக்கூடிய நற்குணங்களிலே சாந்தம், சகிப்புத்தன்மை, பொறுமை, முதலியவைகள் மிக மிக அத்தியாவசியமானதாகும். இந்த அருங் குணத்தை கைக்கொள்ளாததினாலேயே இன்றைய உலகில் அமைதி காண்பது குதிரைக் கொம்பாக விருக்கிறது. ஆனால் நேர்மாற்றமாக எங்கு நோக்கினும் அராஜகமும் அநீதமும், சர்வாதிகாரப் பண்பும் தான் தலைவிரித்தாடுகிறது. சாந்தத்தைக் குறித்து குர்ஆனில் பல விடங்களிலே இறைவன் அருளியிருக்கிறான், அதில் சிலவற்றை அன் பர்களின் கவனத்திற்குத் தருகிறேன்.

விசுவாசிகளே! சாந்தத்தைக் கைக்கொள்ளுங்கள், இன்னும் ஒரு வருக்கொருவர் சாந்தத்தைக் கொண்டு உபதேசம் புரியுங்கள். இன்னும் ஒற்றுமை கட்டுப்பாடோடு வாழ்க்கை நடாத்துங்கள். (குர்ஆன்=2-20.)

சாந்தத்தைக் கைக்கொள்ளக்கூடிய விசுவாசிகட்கு அல்லாஹ் எண்ணற்ற நற்பாக்கியங்களை நல்குகிறான் (குர்ஆன்=33-2.)

விசுவாசிகளே! தொழுகையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும், உங்கள் இறைவனிடத்து உதவி தேடுங்கள். நிட்சயமாக அல்லாஹு சாந்த மூர்த்திகளுடனிருக்கின்றான். (குர்ஆன்=2-19.)

உங்களில் உண்மை தியாகி, சாந்த மூர்த்தி யார்? யார்? என்பதை பரிசோதிப்பான் வேண்டி பலவித இடுக்கண்களைக் கொண்டு நாம் உங்களை சோதிப்போம் (குர்ஆன்=26-4.)

மேலே கூறப்பட்டுள்ள வாக்கியங்களனைத்தும் அருமறையில் அல்லாஹு அருளிய அமுதமொழிகளாகும். அவைகளனைத்தும் சாந்தத்தின் மகத்துவம்பற்றியும் சாந்தவான்களடையக் கூடிய நன்மைகள் பற்றியும், பலவித இடுக்கண்களையும் துன்பங்களையும் கஷ்டங் களையும் அன்போடு சகித்து, லட்சியப் பாதையை முன்னோக்கி செல் பவர்களே உண்மையில் சாந்தவான்கள் என்பதையும் மிக விளக்கமாக அல்லாஹு நம்மவர்கட்கு எடுத்தியம்பியிருக்கிறான். ஆதலின் நபி

பெருமானவர்களின் பொன்மொழிகளில் சிலவற்றையும் கீழே தருகிறேன். ஈண்டு கவனித்து சாந்தத்தின் மஹாத்மியத்தைப் படித்துணருங்கள்.

அன்ஸாரிகளில் சிலர் நபிகளிடம் தங்களின் பசியை போக்க ஏதாவது கொடுங்கள், என ஸுவால் செய்தார்கள். அதற்கு நபியவர்கள் தங்களிடமிருந்தவைகளில் நின்றும் கொடுத்தார்கள். பின்பும் திரும்ப திரும்ப ஸுவால் செய்தார்கள். நபிகளும் திரும்ப திரும்பக் கொடுத்தார்கள். கடைசியாக நபிகள் கூறினர்கள்: எவன் சுயபூர்த்தியை நாடுகிருனே அல்லாஹு அவனை சுயபூர்த்தியுள்ளவனுக ஆக்கிவைப்பான், எவன் பிறரிடம் கேட்காது பத்தினித்தனமா யிருப்பதை நாடுகிருனே, அல்லாஹு அவனை பத்தினியாளனுக சமைத்துவைப்பான். எவன் சாந்தத்தை நாடுகிருனே அவனை சாந்த சத்தியசிலனுக ஆக்கிவைப்பான். எனவே சாந்தத்தை விட மஹத்துவம் நிறம்பிய வஸ்து வேறொன்றில்லை என நபிகள் கூறி முடித்தார்.

(ராவி=அபூஸஈது (ரலி); நூல்=புகாரி முஸ்லிம்.)

கஷ்டங்களின் மீதும், வாழ்க்கையின் இடுக்கண்கள் மீதும், வணக்கங்கட்கு ஏற்படக் கூடிய இடர்கள் மீதும் ஒரு விசுவாசி பொறுமையை கைக்கொள்வது கொண்டு மண்ணரையில் இவனுக்கு ஜ்வலிக்கக்கூடிய தினகரனுக சாந்தத்தை அல்லாஹு ஆக்கிவைப்பான்.

(ராவி=அபூமாலிக் (ரலி); நூல்=முஸ்லிம்.)

உண்மை விசுவாசி சந்தோஷத்திற்கு இறைவன் பால் நன்றி செலுத்துவான். கஷ்டங்களின் மீது பொறுமையைக் கைக் கொள்வான். எனவே இவ்விரண்டும் அவனுக்கு மஹா மேலானதாயிருக்கும்.

(ராவி=ஸுஹைபு (ரலி); நூல்=முஸ்லிம்.)

இதே போன்று எண்ணற்கியலாத நபிகளின் நன் மொழிகள் இருக்கின்றன. எனவே முஸ்லிம்கள் பால் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்கு உண்மையான மருந்து அல்லாஹு கூறியுள்ள சாந்தமும், அவனது கட்டளைகளை சிரமேற்றுங்கி நடப்பதே யாகும். நிட்சயம் பலவித சோதனைகட்குப் பின்பு வெற்றி கிடைப்பது நிட்சயம். ஆதலின் முஸ்லிம்கள் உண்மை முஸ்லிம்களாய் தம்மை சமைத்துக் கொள்ள முயற்சிப்பார்களாக.

# தர்த்தீபுஸ்ஸலாத் என்னும்
# தொழுகையடைவு ஹனபி

## வெளிவந்து விட்டது

சுத்த தமிழ்

## இரண்டாம் பதிப்பு

இதில் ஐந்து கலிமாக்கள், இஸ்லாத்தின் இயல்பு, ஈமான் நிலை, முழுக்கின் விதிகள், உலுவின் ஸுன்னத்துகள், உலுவின் துஆ, தொழுகையின் பர்லுகள், தொழுகையின் வாஜிபுகள், பாங்கு இகாமத்து, பாங்கு துஆ, ஐந்து தொழுகையின் தக்பீர்கள், ஸுன்னத்து தொழுகை தக்பீர், அத்தஹிய்யாத் இஸ்திக்பார், பொதுவான துஆ, ஐந்து தொழுகையின் துஆக்கள், கஸ்ரு தொழுகை, கஸ்ரு தொழுகைத் தக்பீர், ஜும்ஆ தொழுகை, அதன் தக்பீர், ஸஜ்தா திலாவத், நோன்பின் ஷர்த்து, நோன்பின் நிய்யத்து, நோன்பின் முறிச்சல்கள், நோன்பு திறக்கும்போது ஓதுகிற துஆ, தராவீஹின் விபரம், தராவீஹுடைய தக்பீர், நோன்பு பெருநாள் தக்பீர், ஹஜ்ஜு பெருநாள் தக்பீர், தக்பீரு தஷ்ரீகி, மையித்துக்கு செய்யும் முறைகள் ஆகிய இவைகளும் மற்றும் விபரங்களும் அடங்கி இருக்கின்றன.

தமிழும் அரபியும் கலந்தது. இதன் விலை அணா. 4

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 8

# ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ்
# அவர்களின் சரிதை.

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களை சந்தித்ததும், இருவர்களுக்குமுள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலை யுண்டதும் விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன. விலை அணா 10

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# 'ஒழுக்கம் உயர்வானது'

(எம். கே. ஏ. எஸ். அஹ்மத் மீரு. சீருடையபுரம்)

நல்லது, கெட்டது என்ற இரண்டும் கலந்திருப்பது இவ்வுலக இயற்கை. நெடுநாட் பழக்கத்தினுலும், தேர்ந்த அறிவினுலும், உயர்ந்த பல ஆகமநூல்களின் வாயிலாகவும் நல்லது கெட்டது என பிரித்தறிதல் கூடும். நல்லது எனப்படும் நல்லொழுக்க மென்பது, மனிதனது உண்மையான உயரிய மேன்மையை எண்பித்துக் காண்பிப்பனவாயிருக்கிறது. இவ் வொழுக்கத்தின் பால் மக்கள் ஒழுகி உயர்வாகத் திகழவேண்டிதான் கல்வியை மக்கள் பயிலுவது கடமையாக்கப் பட்டிருக்கிறது. கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக; என்ருர் குறளுடையாரும்.

அறிவுள்ளத்தை ஆழமாக்க சிந்தனையுலகத்தைச் செப்பனிட, கபடத்தைக் கருவறுக்க, குறிப்பாக ஒழுக்கத்தை உடைமையாகக் கொண்டு உயர்வாகத் திகழ கல்வி வேண்டுமென்பது கற்றவர்களின் கருத்து: என்ருலும் ஒருவனுக்கு கல்வி இல்லாதுபோய் விடினும், உலகத்தோடு ஒத்து நடக்கும் உயரிய பண்பிருந்து பெரியவர்கள் பால் பழகி, பழக்க மிகுவால் ஒழுக்கமுடையவனுய்த் திகழ்தலுங்கூடும். இளமையிலிருந்து (மனிதன்) பின்பற்றப்பட்டுவந்து பழக்கமிகுவால் வருவதற் கொன்ருகும் ஒழுக்கமென்பது; கல்வியோ வேண்டுங்கால் முயன்று படித்துக் கொள்ளுதற்குரிய தொன்ருகும். எனவே கல்வியிலும் ஒழுக்கமே சிறந்தது (எனப்படலாம்.)

ஒழுக்கம் (அதப்) என்னும் அரபிப் பதத்திற்குங்கூட 'மனத்தைப் பழக்கிப் பக்குவப்படுத்தல்' என்று (தான்) கருத்துக்கொள்ளும். இங்ஙன மொருவன் மனத்தைப் பழக்கிப் பக்குவப்படுத்தி விசேஷப் பயிற்சியைக் கொண்டு மிக்க நல்லமுறையிலே பயிற்றுவிக்கப் பெறுகிருனே அவனே மனித குலத்தில் மகத்தானவன் ஆகிருன். மனித இனத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இல்லாது போய் விடினும் மனித இனத்தில் உயர்ந்தோர் என்னும் உயர் சொல்லுக்குரியவரொருவரிருக்கிருர். அவராரென வினவுவோமாயின் இறைவனது பார்வையில் மகா கண்யபுருடராய் விளங்குபவர் ஒழுக்கத்தில் தலை சிறந்தவராய் விளங்குபவரேயாவர். உங்களுக்குள்ளே (மனிதவர்க்கத்திலே) மகாசிலக்கியமானவர்கள் மிகவும் மேலான குணுதிசயங்களை (ஒழுக்கங்களை) உடையவராயிருப்பர் என்பது உத்தம நபி (ஸல்) அவர்களின் கூற்ருயிருக்கிறது.

நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்கும் உத்தமனிதயத்தில் நீதி நேர்மை ஏற்பட்டுவிடுகிறது. நேர்மையுள்ளவன் நடவடிக்கை அழகு

தருகிறது. அழகுவாய்ந்த தன்மையினையுடைய அவனது வீட்டில் நிம்மதி நிலவுகிறது; வீட்டிலே நிம்மதி நிலவினுல் நாட்டிலே ஒழுங்கு ஏற்படுகிறது; நாட்டி லொழுங்கிருப்பின் உலகத்தில் சமாதானம் (நிறுவி) நிலைத்து விடுகிறது. மீக்கூறிய (அறிஞரின்) அறிவுரைகளுக்கொப்ப இன்றைய உலகம் (மக்கள்) இருக்கிருர்களா என்று நோக்குமிடத்து இல்லை என்பதே தெற்றெனப்புலனுகிறது. இன்றைய உலகமக்களிடத்து நல்லொழுக்கமென்பது மிகமிக நலிந்துபோய் விட்டிருப்பது என்பதை நாம் யூகித்துக் கொள்வதற்கு தற்கால உலக நிகழ்ச்சியே அதற்குச் சான்றுபகர்கிறது. மக்கள் சுதந்திரமாக சுபிட்சமாக மகிழ்ச்சியுடன் சமாதானமாக வாழவேண்டுமானுல் மக்கள் ஒழுக்க நெறிதவருதிருத்தல் ஒன்றைக்கடைப்பிடித்தலே போதுமானது என்பதே முற்றமுற்ற அறியக்கிடக்கிறது. இதனுலன்றே! 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று ஒழுக்கம்பற்றி உயர்வாக வர்ணித்துள்ளார் வள்ளுவனுரும்.


# முதல்லல் கோஷா நாமா

## (புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக்தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபிநாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளை கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும் முபஸ்ஸிரீன்களும் முஜ்த ஹிதீன்களும் தெண்டித்து விபரித் தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி முதல்லல் கோஷாநாமா வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான் களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாக கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப் பட்டு இருக் கின்றன. இதன் விலை அணு. 8

ஷெ அறபுத் தமிழ் விலை அணு. 12

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா
## அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

(அய்யம்பேட்டை, S. அப்துர் ரஜாக் ஸாஹிப்.)

(2—வது பகுதி)

### ஷாஜவ்லக் செய்த குற்றம் ஷய்க் அவர்களின் வருத்தம்.

ஷய்க் அவர்கள் தம் சமையல்காரருக்கு அவர் ஒவ்வொரு சாப்பாட்டின் போதும், சாப்பாட்டுடன் மாமிசக் குழம்பு தயாரித்துக் கொண்டு வந்தாலொழிய தமக்கெதிரில் சாப்பாடு கொண்டுவரக்கூடா தென கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தார்கள்.

அவ்வுத்தரவிற் கிணங்க சமையற்காரர் தவறுமல் ஒவ்வொரு நாளும் மாமிசம் சமைத்து வந்தார். ஆனல் இருந்தாற்போலிருந்து ஒருநாள் ஏதோ ஓர்காரணமாக ஒரு கடையிலாவது மாமிச விற்பனை இல்லாமற்போகவே, சமையற்காரர் விசேஷ கவலையுடன் அதைதேடிக் கொண்டு வருவதில் எங்கெங்கேயோ அலைந்து பார்த்துங்கூட மாமிசம் கிடைக்காமற்போகவே, அதைப்பற்றி ஷாஜவ்லக் என்பவருக்கு தகவல் கொடுத்தார். ஷாஜவ்லக் என்பவர், ஷய்க் அவர்களின் கீழ் அவர்கள் சகல நிர்வாக காரியங்களையும் கண்காணிக்கும் பொறுப்பை வாய்ந்திருந் தபடியால் சமையற்காரர் வாயலாக 'மாமிசம் இல்லை' என்பதைக்கேட்ட தும், அவர் திகைத்துவிட்டார்.

சாப்பாட்டுநேரமோ சமீபித்து விட்டது. இந்நெருக்கடியான சம யத்தில் என்ன செய்வதென அவருக்கும் தோன்றவில்லை. ஹஸ்ரத் ஷய்க் அவர்கள் தம் உயிருக்கொப்பாக அவ்வளவு செல்வமாய் ஆட்டுக் கிடா ஒன்றை வளர்த்து வந்தார்கள். தாம் சாப்பிடும்படியான ஒவ்வொரு பதார்த்தத்திலும், அக்கிடாவுக்காகவும் அவர்கள் சரிபங்கை யெடுத்து அதற்கு ஊட்டிவருவார்கள். ஷாஜவ்லக் துர்ரதிர்ஷ்டவசமாய் இச்சமயத் தில், ஹஸ்ரத் ஷய்க் அவர்களின் அதிருப்திக்கெதிரில், அக்கிடாவை ஹலாலாக்கி விடுதல் மேலெனக்கருதி, சமையற்காரரிடமிருந்து கத்தியை வாங்கி, அதை உடனே 'ஸபஹ்' செய்துவிட்டார். மாமிசக் குழம்பு சாப்பாட்டு விரிப்பின்மீது வழக்கம்போல் கொண்டுவந்து வைக்கப்பட்டது.

ஷய்க் அவர்கள் தம் ஆட்டுக்கிடாவின் உணவு பாகத்தை தனியே எடுத்துவைத்து விட்டு அதனை கூப்பிட ஆரம்பித்த சமயம் ஷாஜவ்லக்

மிகவும் வருந்தி உண்மையை எடுத்துக்கூறினர். அதைக்கேட்ட ஷய்க் அவர்கள் திடுக்கிட்டுப்போய் துக்கத்தின் பொருட்டு 'ஹோ' என அழுக ஆரம்பித்தார்கள்.

அப்பால், அழுகை முடிந்ததும் ஷய்க் அவர்கள், "என்கிடாவை எக்கத்தியைக்கொண்டு அறுத்தீர்கள்? அக்கத்தியை எனக்கு கொண்டு வந்து காண்பியுங்கள்" என்று சொன்னபோது அக்கத்தி அவர்களுக்கு கொண்டுவந்து காண்பிக்கப்பட்டது.

ஷய்க் அவர்கள், கத்தியை தம்கையில் வாங்கி அதை சற்றுநேரம் வரையில் பெரிதும் ஆயாசத்துடன் உற்றுநோக்கியபின் "இதோ! உங்கள் கத்தி, உங்களுக்கே முபாரக் (மங்களம்) ஆகுக" எனச்சொல்லி அதை வாப்பீஸ் செய்துவிட்டார்கள். ஆனால் கத்தியை வாப்பீஸ்செய்த ஷய்க் அவர்கள் சிறிது நேரத்திற்குள் விசேஷ ஆத்திரமும் ஆசாபங்கமும் அடைந்த தம்முரீதுகளையும் ஏனையதோழர்களையும் தம் எதிரில் அழைத்து "என்மனம் புண்பட்டுவிட்டதால், எனக்கு கிஞ்சித்தும் ஆறுதல் கிடையாது. எனவே, நீங்களெல்லோரும் இதே சமயம் இந்த விடத்தை விட்டு எங்கேனும் போய்விடுங்கள். நானும் எங்கேயாவது போய் விடுகிறேன்" என்று வெகு கண்டிப்பாக அறிவித்துவிட்டார்கள்.

ஷய்க்வாயலாக அம்மொழிகளை செவியுற்ற அனைவர்களும் துடித்துப்போனார்கள். குறிப்பாக ஷாஜவ்லக் அதாவது சையத் அலி என்பவரின் உள்ளம் துக்கத்தால் பிளவுபட்டது. ஆனால் என்ன செய்வது! ஷய்க் அவர்களுக்கு எதிராக மறுத்துப் பேசவோ அல்லது எதையொன்றும் சொல்லவோ, எவரொருவருக்கும் சக்தி இல்லாதிருந்தது.

இனி அவர்களுக்கு பிரயாணம் போவதைவிட வேறுவழியில்லை. எனவே, எல்லோருமாகக்கூடி பிரயாண அனுமதிப் பெறுவதற்காக, ஹஸ்ரத் ஷய்க் அவர்கள் சமுகத்தில் வந்தனர்.

ரூம் பாதுஷா வாகிய சையத் நத்ஹரும் அக்கூட்டத்தில் சேர்ந்து வந்த போது, ஷெய்க் அவர்கள் அவரைக் கண்டதும் கண்ணீர் விட்டு "அல்லாவுடைய பிரியத்திற்கேற்பவே எல்லா சம்பவங்களும் நடைபெறும். அவன் கடுங்கோபி என்பதற்கு நிகரில் பெரும் கிருபையாளனு மாவான். நீங்கள், அவன் காவலாக போய் வாருங்கள், அல்லா நாடினல் நம்மை மீண்டும் சந்திக்கச் செய்வான்" என்று உபதேசித்தார்கள்.

ஷெய்க் சமுகத்தை விட்டும் எல்லோரும் பிரிவினையுற்று சகிக்கொணு துயரத்துடன் கண்ணீர் சொரிந்த வண்ணமாக நாட்டை விட்டும் காட்டை யடைந்தார்கள்.

பிரயாண வழி நெடுக காடும், மேடும், பள்ளமும் குறுக்கிடுவதை யெல்லாம் அவர்கள் தாண்டி செல்ல வேண்டி யிருந்தது. இரவும் பகலும் அவர்கள் நடந்து கொண்டே இருந்தார்கள்.

இந்நிலைமையில் அவர்களுக்கு சரிவர ஒருமாத காலம் கழிக்க நேரிட்டது. அவ்வாறான கஷ்டம் நேரிட்டதோடிராமல், எதிரில் அவர்களுக்கு பெரியதோர் நஷ்டமும் குறுக்கிட்டது.

அதாவது, மிக்க விசாலமும் ஆழமுமான சமுத்திர மொன்று இடையே அதி வேகமாய் அலையடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு எல்லோரும் அதன் கரையில் தடைபட்டு விட்டனர்.

அதன் அலைகளின் வேகத்தை ஊன்றி கவனிப்போருக்கு குலை நடுக்கம் ஏற்படத்தக்கதா யிருந்தது. ஒருவர் அதில் முழங்கால் ஜலத்தில் அடியெடுத்து வைத்து இறங்கிய போதிலும் அது தன் அலை வேகத்தால் அவரை இழுத்துக் கொண்டு போய்விடும் போலாயிருந்தது.

காட்டினுள் அக்கம் பக்கத்திலும் மனித சஞ்சாரமில்லை. பகீர் கோஷ்டியினர் கடற் கரையில் மலைத்து நின்றார்கள்.

## ஷாஜவ்லக் உடைய கராமத்து

கடைசியாக கோஷ்டியினர் அதன் ஓரத்திலிருந்தே ஜலத்தை பாத்திரத்தால் மொண்டு சிலர் குளித்தும், சிலர் குடித்தும் ஆனபின்னர் அதே விடத்தில் ஏதோ ஒரு உணவையும் சமைத்து அதை ஆளுக்கு கொஞ்சமாக புசித்து விட்டு இனி என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும் சமயம் ஷாஜவ்லக் அந்த கடலை உற்று நோக்கினர். சிறிது நேரத்திற்குள் அவர்களுக்கு ஒரு படகு வரத் தென்பட்டது.

வியாகூல முள்ளவர்களுக்கு அப்படகு புதிய பிறையைக் கண்டது போலா யிருந்தது.

படகு கடலோரத்தை அடைந்ததும், எல்லோரும் அதற்குச் சமீபம் சென்று படகோட்டியிடம் அக்கரைக்குச் செல்வதற்கான சத்தத்தை நிர்ண்யித்து, அப்படகில் ஏறும் சமயம் அவர்களுக்கு எதிர் பாராததோர் தடை ஏற்பட்டு விட்டது. அத்தகைய தடை யாதெனில், அக்கோஷ்டியைச் சேர்ந்த கலந்தர் பகீர்களுக்கிடை ஒருவர், நாய் ஒன்று வளர்த்து வந்தார். நாய் வளர்த்தவருடன் இருத்தல் சகஜமாதலால், இச்சமயம் அவருடன் அவரது நாயும் படகில் ஏறச் சென்றது.

படகோட்டி அந்த நாய் தன் படகில் ஏறக் கூடாதென மறியல் செய்தார். அசுத்தமான பிராணியை தன் படகில் ஏற்றுவதா யிருந்தால் ஒருவருமே அதில் ஏறக்கூடாதென கண்டித்து விட்டான்.

கலந்தர் பகீர்கள் தங்களா லியன்றமட்டில் படகோட்டியை கெஞ்சிப்பார்த்தார்கள். ஆனால், ஒன்றும் சாத்தியப் படவில்லை. பகீர்கள் கெஞ்சுவதையும் படகோட்டி முடியவே முடியாதென கர்வத்துடன் பதில் சொல்வதையும் செவியுற்ற ஷாஜவ்லக், என்பவருக்கு விசேஷ மன வேதனை ஏற்பட்டது.

உடனே அவர் எழுந்து முன்னேக்கிச் சென்று "சகோதரர்களே நீங்கள் பயப்பட வேண்டாம், நாம் ஏழை பகீர்களாக இருந்தால் தான் என்ன! ஷெய்க் உடைய சகாயம் இச்சமயத்தில் எங்களுக்கு கிடைக்காது போய் விடுமா? கொண்டு வாருங்கள் என் "கச்கோல்" (பகீர்கள் வைத்திருக்கும் படகு ரூபத்தை போன்ற பாத்திரம்) கலந்தர் 'கச்கோலே' கொண்டு வந்து கொடுத்ததும் ஷாஜவ்லக் தம் மகிமையைக் கொண்டு அதை விசாலப்படுத்தி, பகீர்கள் அனைவரையும் ஒருவருக்குப் பின் ஒருவராக அதில் ஏறச் செய்தார்.

கலந்தர்கள் அனைவரும் ஏறியான வுடன், ஷாஜவ்லக் கச்கோலே நோக்கி, "உஷார்! நீ இவர்கள் எல்லோரையும் ஏற்றிக் கொண்டு போய் அவர்களை பத்திரமாக கரையில் சேர்க்க வேண்டும்" என்று கூறினார்கள்.

அதற்கப்புறம் கடலைப் பார்த்தும் "ஜாக்கிரதை! படகில் உள்ளவர்களுக்கு எள்ளளவும் தீங்கு நேரிடாதிருக்க வேண்டும்" என்றும் கண்டித்துச் சொன்னார்கள். உடனே கச்கோல் படகு ஆச்சரியப்படத் தக்கவிதமாய் நேரே அக்கரைக்கு விரைந்து சென்றது.

குறித்த நேரத்திற்குள் அது அக்கரையை அடைந்த வுடன் பகீர்கள் யாவரும் கீழே இறங்கி குருவின் மரியாதைக்காக கை கட்டி நின்றார்கள்.

அப்போது ஷாஜவ்லக் அவர்களிடம், "நீங்கள் யாவரும் தங்குவதற்கானதோர் இடத்தை தேடிக்கொள்வதுடன் இந்த ஊரின் பெயர் என்ன? இங்குள்ள தலைவர் யார்? என்பதையும் விசாரித்து வாருங்கள்" என்று உத்தரவு செய்தார். அவ்வுத்தரவை சிரமேற் கொண்டு விசாரிக்கச் சென்றவர்களில் ஒருவர் ஓடிவந்து அந்த ஊரின் பெயர் 'கஹன்கார்' என்றும், தலைவரின் பெயர் 'வாஹிதி' என்றும் அறிவித்தார்கள்.

## படகுக்காரன் கொடியதோர் விபத்தின்போது ஷாஜவ்லக் அவர்களை அழைத்தல்.

முந்தின படகுக்காரன் பகீர்களை ஏற்றிக் கொள்ளாமல் அலக்ஷியமாய் சென்று விட்டான் என மேலே கூறப்பட்டதல்லவா? அதற்கு கடலில் பெரியதோர் விபத்தும் நேரிட்டது. அதாவது, கடலில் திடீரென கடுமையான புயல் காற்று ஏற்பட்டதன பயனாக அப்படகு

187029

கவிழ்ந்து போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதில் உள்ள யாவரும் கூக்குரலிட்டு கண்ணீர் விடக்கூடிய ஆபத்திற்கு ஆளாகி விட்டனர்.

அச்சமயத்தில் அப்படகுக் காரன் தான் செய்த குற்றத்தின் விளைவே இச்சமயத்திய சம்பவம் என நினைக்கும்படியாயிற்று.

எப்படியானுலும் ஆகட்டும் குருவான ஜவ்லக் இச்சமயத்தில் தங்களை காப்பார் என்ற நம்பிக்கைக் கொண்டு, "ஷய்கே! காத்துக் கொள்ளுங்கள்" என உரத்த சப்தமிட்டான்.

அவர் சப்தமிட்ட சமயத்தில் ஷாஜவ்லக் தம் கோஷ்டியின் பகீர்களுடன் தாம் இறங்கியிருந்த ஜாகையில் வீற்றிருந்தார்கள். 'கைப் புண்ணுக்குக் கண்ணுடி ஏன்?' என்பது போல் அவர்களுக்கு அப்படகின் விபத்து நன்கு புலனுயிற்று. அதே சமயம் அவர், தாம் வீற்றிருந்த விருப்பின் கீழ் தம் வலது கையை விட்டு ஒரு நிமிஷ நேரத்திற்குள் கையை வெளியே இழுத்துக் கொண்டார்கள்.

கையை இழுத்துக் கொண்டபோது முழங்கை வரையிலுமுள்ள சட்டை நனைந்திருந்தது.

நனைந்திருந்த சட்டையைப் பிழிந்து, பிழிந்த ஜலத்தை அங்குள்ளவர்களை சுவைக்கச் செய்தார்கள்.

ஜலத்தை சுவைத்த அனைவர்களும், "ஹஸ்ரத்! இந்த ஜலம் உப்பு கரமா யிருக்கிறது" என்று சொல்லியபோது, ஷாஜவ்லக் அதைப்பற்றி பின்வருமாறு விவரித்தார்கள்.

படகுக்காரன் நம்மை ஏற்ருமல் ஓட்டிச் சென்ற படகானது புயல் காற்றுல் சிக்குண்டது. படகுக்காரன் படகை காத்துக் கொள்ள என்னை அழைத்தான். நான் அப்படகை காப்பாற்றி விட்டால் அதிலுள்ள எல்லோரிடத்திலும் இருக்கப்பட்ட பொருளில் பேர்பாதியை எனக்குக் கொண்டு வந்து கொடுப்பதாயும் அவன் என்னை வேண்டிக்கொண்டான். அவனது கஷ்டத்தை உணர்ந்து அப்படகை காக்கவே நான் உங்களுக்கு முன் விரிப்பின் கீழ்கைவிட்டேன். சுழல் நீரில் சிக்கிப்போயிருந்த படகை கையால் அப்புறப்படுத்த முயற்சித்தபோது என் கைச்சட்டை முழங்கைவரையில் கடல் நீரினுல் நனைந்துவிட்டது. நீங்கள் சுவைத்தது கடல்நீர். அதனுல்தான் அது உப்புகரமாயிருந்தது. இதோ சற்று நேரத்திற்குள் படகோட்டிதானே இங்கு வரப்போகிருன்" என்று சொன்னபிரகாரமே படகோட்டி ஷாஜவ்லக் சமுகத்தில் ஆஜராகி

அவர்களுக்கு அளவிறந்த மரியாதை செய்து தாம் செய்த வேண்டுதலுக்குரிய பொருள்களையும் ஷா அவர்களுக்கு எதிரில் சமர்ப்பித்தான்.

ஷாஜவ்லக் அவர்கள் அவைகளை பார்வையிட்டதும் "நீஉன்வேண்டுதலின் பிரகாரம் பேர்பாதி பொருள்களை கொண்டுவரவில்லை. அவற்றுள் குறைவாகவே கொண்டுவந்திருக்கிறாய்" என்று சொன்னபோது அவன் அது உண்மைதான் என ஒத்துக்கொண்டு மன்னிப்புக்கேட்டவனாக விட்டுப்போன பொருள்களை மீண்டும்போய் கொண்டு வருவதாக முறையிட்டான்.

ஷாஜவ்லக் "உன் பொருள்களுக்காக நான் ஆசைவைக்கவில்லை. நீ இப்போது இவற்றை என்னிடத்திற்கு கொண்டுவந்து விட்டதற்காக இதில் உள்ள நாலிலொரு பாகத்தை மாத்திரம் என்தோழர்களுக்காக கொடுத்து விடுவாய்" என்று மொழிந்தார்கள்.

## ஷாஜவ்லக் அவர்களின் இரண்டாவது கராமத்

ஷாஜவ்லக் தம் தோழர்களுடன் இறங்கியிருந்த ஸ்தலத்தின் தலைவர் அதாவது அதிபதியுடைய பெயர் வாஹிதிஎன மேலே கூறப்பட்டதல்லவா? அந்த அதிபதியிடத்தில் ஏராளமான போர்வீரர்கள் இருந்துவந்தார்கள்.

அப்படியிருந்தும் அன்னிய நாட்டு அரசன் ஒருவன் வாஹிதி நாடாகிய 'கன்கார்' மீது படை யெடுத்து வந்தான். தன் எதிரி, யாதொரு அறிக்கையுமின்றி திடீரென வந்து விட்டான் என்பதைக் கேட்டதும் வாஹிதி திடுக்கிட்டு, என்ன செய்வதெனத் தெரியாமல் தன் கோட்டைக்குள் நுழைந்து கதவை பலமாய் அடைத்துக் கொண்டான்.

அந்த நிலைமையைக் கண்ட விரோதி பெரிதும் பேரானந்தத்துடன் கோட்டையை முற்றுகை யிட்டான்.

வாஹிதிக்கு தன்விரோதிக்கு கீழ்ப்பட்டுபோக மனமில்லை, சண்டை செய்யவும் துணிச்சல் கிடையாது.

இப்படி இருந்து வரும் சமயம் ஷா ஜவ்லக் என்பவரை ஏற்கனவே வேண்டிக்கொண்டு பலனுற்ற படகோட்டி இப்போது வாஹிதிடத்திற்கு தற்செயலாக வந்தான். வாஹிதிக்கும் படகோட்டிக்குமிடை வெகு நாளாக சிநேக பான்மை இருந்து வந்ததே இதற்குக் காரணம்.

படகோட்டியைக் கண்ட வாஹிதி தம் இக்கட்டான நிலைமையைக் கூறி தற்போது என்ன உபாயம் செய்வதென படகோட்டியைக் கேட்டான்.

படகுக்காரன் ஹஸ்ரத் ஷா ஜவ்லக் அவர்களின் மகிமையை விளக்கிக் கூறி உடனே அவர்களிடஞ் சென்று அவர்களின் தெய்வீக உதவியை வேண்டிக் கொள்ளுமாறு ஆலோசனைக் கூறினான்.

அவன் கூறிய ஆலோசனைக் கிணங்க, அதிபதியான வாஹிதி நடுராத்திரியிலேயே ஒளிமறைவாகப் போய் ஷா அவர்கள் சமுகத்தில் ஆஜரானான்.

ஷா அவர்கள் அவனைக் கண்டதும் இந்நேரத்தில் உமக்கு என்னிடம் வர நேரிட்ட அலுவல் யாது? என வினவியபோது அவன் விரோதியின் எதிர்ப்பைப் பற்றி விவரித்து தனக்கு உதவி புரியுமாறு ஷா அவர்களை இறைஞ்சிக் கேட்டான்.

ஷா ஜவ்லக், அவன் வாயிலாக அவன் கஷ்டத்தைக் கேட்டவுடன் அச்சமயம் தமக்கெதிரில் இருந்துவந்த மோர்ச்சல் (மயில் இறகுத் துடப்பம்) ஒன்றை யெடுத்து அதை வாஹிதி உடைய கையில் கொடுத்து "நீர் இதை கோலொன்றில் கட்டி அக்கோலை படைக்குமுன் நிலை நாட்டிவிடும். விரோதி அதைக் கண்டதும் உள்ளம் கலங்கித் திரும்பிப் பாராது ஓட்டம் பிடிப்பார்கள்" என்று சொன்னார்கள்.

வாஹிதி அதை யெடுத்துச் சென்று யுத்தகளத்தில் தாம் போர் நடத்தப் போவதாக விரோதிக்கு பறை யறிவித்து ஷா அவர்களின் உபதேசத்திற்கிணங்க 'மோர்ச்சலை' நாட்டி விட்டான். அதாவது ஷா ஜவ்லக் சொல்லிய பிரகாரமே விரோதியின் படை களத்தில் ஒழுங்காய் நிறுத்தப்பட்டு வந்த நேரம் வரையில் வாஹிதி அந்த மோர்ச்சலை வஸ்திரத்தால் மூடி வைத்திருந்து பிறகு அந்த மேல் வஸ்திரத்தை அகற்றி விட்டான்.

முதலில் சேனாதிபதியின் பார்வை மோர்ச்சலில் பட்டது. அதற்கடுத்தாற் போல், போர் வீரர்களும் அதை கவனித்தனர். கவனித்த ஒரே நிமிஷ நேரத்திற்குள் எல்லோரும் வெருண்டு உள்ளம் துடிக்க ஓடத் தொடங்கினர். சுருங்கச் சொல்லில், வேட்டையாட வந்த விரோதிகள், தங்கள் வேட்டைக்கு தாங்களே இரையாகி விட்டனர். ஷா அவர்களின் அனுக்கிரகத்தால், அதிபதியான வாஹிதி மீண்டும் தம் நாட்டிலேயே பூரண நிம்மதியுடன் வாழ்ந்து வந்தான்.

## கஸஸுல் அன்பியா.

### இது நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமா தென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுசு அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம், ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம். இது திறமான காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டிருக்கிறது.

கலிகோ பைண்டு விலை ரூ. 9–8–0

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதற் பாகம் றப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 6

---

கிடைக்குமிடம்:-

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# அனுச்சார அட்டூழியம் நீங்க வேண்டும்.

ஈச்சந்தீவு K. M. H. முஹம்மது அப்துல் காதிர் ஆலிம்

ஏக தத்துவத்தையும் வல்லபத்தையும் கொண்டு அடக்கி யாளும் கிருபையாளருக் கெல்லாம் கிருபையாளனுகிய இறைவன் ஹக்கு சுபுஹானஹு வத ஆலாவுக்கே சர்வ அதிகாரமும் புகழும் உண்டா கட்டும்.

கருணை என்னும் ஸாந்தியும் ஸர்குண சீலர் காத்திமே மில்லத் ஈதுல் அஹலம், ராஜாதி ராஜர், அசத்தியம் என்னுமிருளை ஒழித்து சத்திய வேத மென்னும் பரிசுத்த மார்க்கத்தை எடுத்துக் காட்டி சீர் திருத்திய அண்ணல் நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் மீதும் ஆழ்கள் துயர்ந்தோர் மீதும் ஸலாத்து என்னும் ஸாந்தி உண்டாகட்டும்.

முஸ்லீம் சோதரீர்! நாம், இவ்வுலகில் படைத்த படைப்புகளில் எண்ணற்ற நிஹ்மத் என்னும் பரம உபகாரம் பெற்றவர்களாகவும் அழகில் சிறந்தவர்களாகவும் படைக்கப் பட்டிருக்கின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் சீரிய முறையில் நடந்து கொள்வதும் ஒற்றுமை யென்கிற உவப்புடனும் இருந்து இச்சிறிய வாழ்வை கழிப் பது முக்கிய அவசியமாகும். இன்று நாம் எத்தனையோ தேசங்களில் சீரிய முறையும் ஒற்றுமை அல்லாதவர்களையும் கோட்ட மிட்டிருக் கலாம். அவ்வித மிருப்போர் சமுதாயம் முன்னேற முடியாது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் பழமொழிபோல ஒற்றுமையா யிருப் பதற்கும் சீராய் நடப்பதற்கும் நாம் ஒவ்வொருவரும் முன்னேற வேண் டியது முக்கிய அவசியம்.

சுமார் 1380 ஆண்டுகளுக்கு முன்னர் பரிசுத்த மக்கா என்னு மிஸ்தலத்தில் தனி மனிதன் தோன்றினுர். அவர்கள் செய்வதற்குத் துடங்கிய பிரயாசையை ஏது இடஞ்சல்கள் வந்த போதிலும் விடவே இல்லை. அன்னவர்கள்தான் எங்கள் இறுதித் தூதர், அன்பின் கடல், உலக ரட்சகர் பெருமானுர் (ஸல்) அவர்களாவர். அவர்கள் பிறக்கும் சமயம் அம்மக்கா தேசம் முழுவதும் அனுச்சார அட்டூழியங்கள் நிறைந் ததிலும் நிறைந்ததாகவே இருந்தது. பொய், களவு, கள், சாராயம் இவைகள் போன்ற குடி வகைகள் பாவித்தல், விபச்சாரம் செய்தல், இவைகளன்றி எண்ணற்ற அனுசார முறைகள் நடந்து கொண்டிருந்தன. எங்களன்பின் தூதர் பெருமானுர் அவர்கள் ஹிஜாத் செல்வதற்கு 13-ம் ஆண்டுக்கு முன்னர் எடுத்த பிரயாசையை ஹிஜாத் சென்று 10-ம் ஆண்டில் முடித்தார்கள். அன்னவர்கள் சீர்திருத்தியோரையே இன்று நாம் உலகம் பூராவும் 82 கோடி மக்கள் தாங்கிப் பிடித்து கையாண்டு வருகின்றுர்கள். இவ்விஷயத்தை எவ்விதம் செய்து முடித்தார்களே யானல் சீரிய நடத்தையாலும் சார்பான குணத்தாலும் இவ்விஷயத்தில் வெற்றி கண்டார்கள். அன்று அக்காபிர்கள் எவ்வித இடஞ்சல்கள்

படுத்தினார்கள்! அதற்கெல்லாம் தலை சாய்க்கவே இல்லை. எங்களன்பின் நபி பெருமானார் (ஸல்) அவர்களை துன்புறுத்தியதில் தலைவன்தான் அபுல் ஹக்கம் என்னும் நாமத்தையுடையவன். அவன் துஷ்ட்ட தனத்திலும் பெரிய துஷ்ட்டன். நபி யவர்களை கொல்வதற்கு எத்தனை உபாயங்கள் செய்தான்! இருந்தாலும் பயனென்ன? அக் கொடியோனால் முடியுமா? அப்பாதகனுக்குத் தான் பின்பு அபூஜஹல் என்று பெயர் வழங்கலாயிற்று.

நபியவர்கள் ஓர் பாலைவனத்தில் படுத்து நித்திரை செய்யும் அத் தருணம் கொடிய காபிரில் நின்று மொருவன் வாளை உருவியவனாக பெருமானாரை வெட்ட வந்தான். அத்தருணம் பெருமானார் அவர்கள் விழித்தார்கள். வந்த கொடியோன் கையில் பிடித்த வாளுடன் உம்மை யார் இவ்விடம் விட்டும் கார்ப்பது என்று கேட்க, எமதண்ணல் நபியவர்கள் கர்ஜித்து மொழிந்தார்கள் "எனது இறைவன் என்னைக் கார்ப்பான்" என்றார்கள். உடனே அவன் கையில் இருந்த வாள் நெகிழ்ந்து கீழே விழுந்து விட்டது. உடனே பெருமானார் அண்ணல் நபியவர்கள் வாளை தாங்கள் கையில் பிடித்து உம்மை யார் இவ்விடத்தை விட்டும் கார்ப்பது என்று கர்ஜித்து கேட்டார்கள். அச்சமயம் பயத் தால் அவன் நடுங்கித் தாங்களே என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று மொழிந்தான். அண்ணல் நபியவர்கட்கு அவனை வெட்டுவது எற்ற தருணமல்லவா? அவர்களின் ஸார்பான குணத்தில் மன்னித்து அவ னுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி யனுப்பினார்கள்.

இன்னல்லாஹா மஅஸ்ஸாபிரீன் நிச்சயமாக இறைவன் பொறுமை யுடையோருடனேயே இருக்கின்றான் என்று திருமறையில் இயம்பியுள் ளான். இன்று நம்முஸ்லிம்களுக் கிடையே வேற்றுமையும் அனுச்சா ரங்களும் வளர்ந்து கொண்டே வருகின்றது. இக்காலத்தில் உண்மை முஸ்லீம்கள் இருந்து காலம் கழிப்பது படுமோசத்தில் இருந்து கொண் டிருக்கின்றது. இன்றே உலமாக்கள் என்கின்ற நபிமார்களின் அனந் தரம் பெற்றவர்கள் எங்களை சிர்திருத்தாவிடில் நாம் ஆடு மாடு என்கிறதற் கொப்பாகி விடுவோம். அவர்களே இன்று எங்களுக்கு நேர் வழியான பாதையை எடுத்து துலக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். எமது இறைவன் பெருமானார் அன்னல் நபியவர்களை நோக்கி கூறுகின்றான். (பதக்கிர் ப்இன்னத்திக்ரு தண்பஉல் முஹ்மினீன்) நபியே தாங்கள் பிரசாரம் புரியுங்கள் அப்பிரசாரம் முஃமினீன்களுக்குப் பிரயோஜன மளிக்கும்.

எமதன்னல் நபியவர்களின் போதனையை ஏற்று சிரிய முறையில் நடந்தார்களோ, அவர்கள் ஜெய மென்னும் வெற்றியை அடைந்து விட் டார்கள்; அல்லாதோர் நஷ்ட மென்னுஞ் சஞ்சலத்தில் ஆழ்ந்து விட் டார்கள். நம் கால பலன்களோ சமீபித்து விட்டது. நம் மூச்சுகள்

சென்று கொண்டிருக்கின்றன. சென்ற மூச்சைத் திரும்ப எடுக்கச் சக்தி அற்றவர்களா யிருக்கின்றோம். ஓடிக் கொண்டிருக்கும் மூச்சு தரிபட்டால், அந்தோ காலம் சென்று விட்டார், அதாவது மரணித்து விட்டார் என்று பரபரப்பு. இவ்வித அற்ப காலங்களுக்குத் தானே, எண்ணற்ற அனுச்சாரத்தைக் கைக்கொண்டு விடுகின்றனர். ஆ! மதி மயங்கி விட்டார்களே.

இவ்வற்ப வாழ்க்கையையா நாம் கைக்கொள்வது, மறு வாழ்க்கையை அல்லவா நாம் முக்கியமாகத் தேட வேண்டும். ஒவ்வொரு தாய் தந்தையர்களும் படாதபாடுபட்டுக் கஷ்டப்பட்டு ஒரு பிள்ளையைப் பெற்று விட்டால் அப்பிள்ளை சிறுக வளர்ந்து வளர்ந்து, பெரியதாகி விடுகின்றான். தக்க பிராயம் அவன் அடைந்ததும் தாய் தந்தை கஷ்டப்பட்டு வளர்த்ததை அவன் மறந்து, அனுச்சாரக் கொள்கையில் முங்கி தாய் தந்தையுடனும் போராடி விடுகின்றான். எமதன்னல் நபியவர்கள் சொன்னதாக.

முஈறதப்னி சுஃபத் (றலி) அவர்கள் கூறுகின்றார்கள்:—தாய் மார்களைப் பேசுவதையும் பெண் மக்களை குழி தோண்டிப் புதைப்பதையும் ஏழைகள் இரக்க வந்தால் தட்டி விலக்குவதையும் அல்லா ஹறாமாக்கி யிருக்கின்றான் என்று மொழிந்தார்கள்.

இன்று ஏழைகள் இரப்பதற்கு வந்தால் எங்களது முஸ்லிம்கள் எவ்வளவு பேச்சுகளும் எவ்வளவோ கேவலங்களும் பண்ணி விடுகின்றார்கள். எவ்வித விஷயங்களை செய்த போதிலும் நம்மை சிருஷ்டித்த நாயன் நோட்ட மிட்டு இருக்கின்றானல்லவா. இதையும் மறந்து விடுகின்றார்கள். பெண் மக்களைக் குழி தோண்டிப் புதைப்ப தென்றால் அக்காலத்தில் மக்கா வாசிகள் பெண் மக்கள் பிறந்தால் குலத்துக்கு ஈனம் வருமென்று பிறந்த உடனேயே உயிரோடு குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள். இவ்வித அனுச்சாரங்களை விட்டுத் தவிழ வேண்டும்.

நாம் யாவர்களும் ஒற்றுமை யென்னும் அன்புடனும் சார்பான குணத்தை எடுத்து அனுச்சார அட்டூழியங்களையும் விட்டுத் தவிழ்ந்து நடப்பதற்கு ஒவ்வொரு முஸ்லீம்களும் தெண்டிப்போமாக (அஸ்ஸலாமு அலைக்கும்)

இறைவன் நம் அனைவோரையும் அவனது சொந்த அடியார்களில் நின்றும் ஆக்குவானாகவும். (ஆமீன்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# நஸ்ஹுல் ஹதீது,
# வபத்ஹுல் மஜீது.

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக் கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து, ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற் பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள், ஸாலிஹீன்கள், நாதாக்களுடைய நஸீஹத்துக்கள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும், தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் இருந்துவிட்டால், தமிழ் முஸ்லீம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது, இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதின் அருமை நேரில் பார்த்தால் தெரிய வரும்.

620-பக்கங்கள் கொண்டது: பெரிய ராயல் ஸைஸ், கிளேஸ் காகிதம், கலிகோ பைண்டு விலை ரூ. 7—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.
நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும் இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும் இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும் இஸ்லாத்தின் சமத்துவங்களும் இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும், ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 16-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1—8—0

ஷை இரண்டாவது பாகம்: இதில் ஹஜரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1—4—0

ஷை மூன்றாம் பாகம்: இது ஹஸ்ரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஜ்ரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும், ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ். 5